பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

பௌதிகவியல்
A/L - 1990
MECHANICS
[பொறியியல்]
ஆரம்பம்:
29 th April
(SUN. 7.00 a.m.)
By
திரு. சோதிலிங்கம்
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்,
இருபாலை.

# உதயன்

விலை
ரூ2/50

A/L 91
பொருளியல்
திரு. லோகசிங்கம்
கணக்கியல்
திரு. மரியதாஸ்
வர்த்தகம்
திரு· தேவா
அளவையியல்
திரு. விக்கி .
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை.

சுடர்: 4 சுக்கில ஞூ சித்திரை மீ 14 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 20 (27 - 04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-120

## விடுதலைப் புலிகளின் பிரதிநிதி

# பாலசிங்கம் நேற்று

# கொழும்பில் பேச்சு!

## ஆரம்ப விடயங்கள் ஆராய்வு

கொழும்பு, ஏப். 27

இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதி திரு. அன்ரன் பாலசிங்கம் நேற்று காலையில் கொழும்பு வந்து சேர்ந்தார்.

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் நடைபெற இருக்கும் பேச்சுவார்த்தை தொடர்பான ஆரம்ப விடயங்கள் குறித்து, அரசாங்கப் பிரதிநிதிகளுடன் அவர் நேற்று ஆலோசனை நடத்தினர்,

ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாஸா நியமித்த தூதுக்குழு ஒன்றுடன் அவர் நேற்றுமாலை பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தக் குழுவில் ஜனாதிபதியின் செயலாளர் திரு. கே. எச். விஜேதாஸா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல, திரு. பீலிக்ஸ் அபேசிங்க ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

திரு. அன்ரன் பாலசிங்கம் லண்டனிலிருந்து தமது துணைவியாருடன் நேற்றுக் காலை கொழும்பு வந்து சேர்ந்தார்.

நேற்று மாலை பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றன.

இந்தப் பேச்சுக்கள் சிநேக பூர்வமானமுறையில் அமைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுக்கும், அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெறவிருக்கும் பேச்சுக்கள் குறித்தும்–

பேச்சுவார்த்தைகள் நடைபெறும் இடம், நேரம் பூர்வாங்க நிகழ்ச்சி நிரல் ஆகி

(6– ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களுக்குத் தனிநாடு அவசியம் என்கிறார் கி.ஆ.பெ.

கொழும்பு, ஏப்ரல் 27

உலகில் தமிழ் மக்களுக்கு என்று ஒரு நாடும் ஐ. நாவில் ஓர் ஆசனமும் இருக்கவேண்டும்.

அப்படி விரும்புவது பாவமான காரியமோ தவறான காரியமோ இல்லை.

இப்படி முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் கொழும்பில் செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:—

உலகில் அரபு மொழிபேசுகின்ற மக்களின் எண்ணிக்கை 6 கோடி.

தமிழ் மொழிபேசுகின்ற மக்களின் எண்ணிக்கையும் 6 கோடி.

அந்த 6 கோடி அரபு மக்களுக்கு 23 நாடுகள் உள்ளன.

ஐ. நா. சபையில் அவர்களுக்கு 21 ஆசனங்கள் இருக்கின்றன.

அதே அளவில் உள்ள தமிழ் மக்களுக்கு ஓர் ஆசனமும் இல்லை.

இப்படி அவர் சொன்னார்.

(உ-எ)

## சிப்பாய்‘கழுத்தை அறுக்கும்’ கோஷ்டியினர் இருவர்கைது!

கொழும்பு, ஏப் 27

''படை வீரர்களின்கழுத்தை அறுக்கும்'' கோஷ்டி எனக் கருதப்படும் இருவர் நவகமுவ பொலீஸாரால் கடந்த ஞாயிறு கைதுசெய்யப்பட்டனர்.

இந்தக் கோஷ்டியினர் ஒரு பேக்கரியில் வைத்து படைவீரர்களின் கழுத்தை அறுத்து பாண் பெட்டிகளில் சடலங்களைப் போட்டு வான்களில் அவற்றை எடுத்துச் சென்று மறைத்து வந்துள்ளனர் என்று பொலீஸார்தெரிவித்தனர்.

[உ-எ]

## காணமற்போன இளைஞரின் எலும்புகளை மீட்க உதவிய அநாமதேயக் கடிதம்!

மட்டக்களப்பு, ஏப்ரல் 27

இளைஞர் ஒருவர் காணமற்போனர். ஒருமாதத்தின்பின் ஒரு அநாமதேயக் கடிதம் வந்தது. கடிதத்தில் ஓர் அதிர்ச்சித் தகவல் இருந்தது.

காணமற்போனவரின்எலும்புக்கூடு குறிப்பிட்ட இடத்தில் இருக்கிறது என்பதே அந்தத் தகவல்.

இச்சம்பவம் அண்மையில் மட்டக்களப்பு நகரில் நடைபெற்றது:

பாரதிலேன் வாசியும், ரயில் நிலையத் தொழிலாளியுமான பொன்னம்பலம் பத்மானந்தம் (20) என்பவரே அந்த இளைஞர்—

தபால்மூலம்கிடைத்த மேற்படி கடிதத்தில் இவரைத் தேடவேண்டாம். மாடுவெட்டும் நிலையத்திற்கு அருகில் எடும்புக்கூடு கிடக்கிறது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இக்கடிதத்தைஅடுத்து பெற்றோர் அந்த இடத்திற்குச் சென்றபோது மாட்டு எலும்புக் குவியலுக்குள் ஒருபொட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை மாவட்டத்தில் ஒரே நாளில் 7 பேர் கொலை!

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 21 ஆம் திகதி மட்டும் ஏழு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

குச்சவெளியில் கௌரிபாலன் (23 வயது), கப்பல் துறையில் ராஜா, மூதூர் முன்னம்பிடிவேட்டையில் ஓம் நமதாஸ் நடேஸ், விளாங்குளத்தைச் சேர்ந்த மனோகரன் ஆகியோரும் – இன்னும் மூவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அந்த மூவரில் ஒருவர் கிங்ஸ்லி தேவசகாயம் என்பவர். மற்றைய இருவரின் பெயர் விவரம் கிடைக்கவில்லை.

இந்த எழுவரும் இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் அல்லது ஆதரவாளர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-150)

## மாணவன் சடலமாக மீட்பு

பலாலி, ஏப்ரல் 27

ஏழாலையில் கடந்த செவ்வாய்க்கிழமையன்று இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து, அப்பகுதியில் மாணவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார், அவரின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது:

கட்டுவன்புலம் மகாவித்தியாலயத்தில்-உயர்தர வகுப்பு கலைப்பிரிவில் பயிலும் பிரபாகரன் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

துப்பாக்கி வெடிச் சத்தத்தைக்கேட்டுத் தமது உறவினர் ஒருவரின் வீட்டில் இவர் தங்கிநின்றதாகவும்—

அவ்வேளையில் படையினரைக்கண்டு, இரு இளைஞர்கள் தமது சைக்கிள்களைப் போட்டுவிட்டு அந்த வீட்டின்வழியே ஓடியதாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து அவ்வீட்டில் தரித்துநின்ற மேற்படி மாணவன் கைதுசெய்யப்பட்டதாகவும் —

பின்னர் மாணவனை மீட்பதற்காக முகாமுக்குச் சென்ற பெற்றோர்களிடம், அம்மாணவனின் சடலம் ஒப்படைக்கப்பட்டதாக அம்மாணவனின் தாய் திருமதி மகேஸ்வரி தெரிவித்தார்.

(உ-ஒ-119)

### சுபநேரம்

27—04—1989
சித்திரை - 14
வியாழக்கிழமை

சுபநேரம்;
07.29 முதல் 08.59 வரை
ராகுகாலம்:
01.29 முதல் 02.59 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## வன்செயலில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு நிவாரணம்

### அரசின் புதிய திட்டம் அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 27

கலவரங்களினாலும் வன்செயல்களினாலும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கும் புதிய திட்டம் ஒன்றை அரசு அமுல் நடத்த உள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வயது வந்த ஒருவர் கொலை செய்யப்பட்டிருந்தால் அவரது நெருங்கிய உறவினருக்கு 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

காயமடைந்திருந்தால் ஆகக்கூடிய பட்சம் 25 ஆயிரம் ரூபா கொடுக்கப்படும்.

சிறு காயங்கள் ஏற்பட்டிருப்பின் 10 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

இந்த நிவாரணத்தைப் பெறத் தகுதி உடையவர்கள் சம்பந்தப்பட்ட உதவி அரச அதிபர் அலுவலகங்களில் கிடைக்கக் கூடிய விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்க வேண்டும்.

அரசின் புனரமைப்புத் திட்டத்தில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட கட்டடங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலை கச்சேரியை இடம்மாற்றுவதற்கு முயற்சி!

திருகோணமலை, ஏப்ரல் 27

திருமலை ''பிரெட்றிக்'' கோட்டையில் இயங்கி வந்த கச்சேரியை நகருக்குள் இடம் மாற்றுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள ''நெல்சன்'' தியேட்டருக்கு கச்சேரியை இடம்மாற்ற முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இந்தத் தியேட்டர் 1983 முதல் இயங்காமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

கச்சேரியில் கடமை புரியும் தமிழ் அரசாங்க ஊழியர்கள் கடந்த 17 ஆம் திகதி முதல் தமது கடமைக்காக கோட்டைக்குள் செல்ல மறுத்து வருகின்றனர்.

''கச்சேரி வெளியே கொண்டுவரப்பட வேண்டும்; அல்லது கோட்டைக்குள் இருக்கும் சிங்கள அகதிகள் வெளியேற்றப்பட வேண்டும்'' என்னும் கோரிக்கையை முன்வைத்தே அவர்கள் வேலைக்குச் செல்லாமல் இருக்கின்றனர்.

கடந்த 13 ஆம் திகதி திருமலை நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து கச்சேரியில் கடமையில் இருந்த தமிழ் ஊழியர்கள் இருவர் தாக்கப்பட்டனராம்.

பெண்கள் உட்பட ஏனைய ஊழியர்கள் காரியாலயக் கதவுகளைப் பூட்டிவிட்டு உயிரைக் கையில் பிடித்தவாறு இருந்தனராம்.

சிறிது நேரத்தின் பின்பு அமைதிப்படையினர் அங்கு சென்று அனைவரையும் பாதுகாப்பாக வெளியே கொண்டு வந்தனர்.

இதே போன்ற சம்பவங்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சும் படைவிலகலும் மகிழ்ச்சி தரும் விடயங்களே!

### புதிய இந்தியத் தூதர் கூறுகிறார்

கொழும்பு, ஏப் 27

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் நடத்தவுள்ள பேச்சுவார்த்தைகள் இந்திய – இலங்கை உடன்பாட்டிற் கூறப்பட்டவாறு விடுதலைப் புலிகள் தேசிய அரசியல் நீரோட்டத்தில் சேருவதற்கு உதவுமானால் அது குறித்து இந்தியா மகிழ்ச்சி அடையும்.

இவ்வாறு இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராகப் பதவியேற்ற திரு. லக்ஹன் லால் மெக்ரோத்ரா முதன்முதலில் அளித்த பத்திரிகையாளர் பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

அமைதிப்படையை விலக்கிக்கொள்வதில் இந்தியா மகிழ்ச்சி அடையும்,

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து எவ்வளவு

(6- ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளையில் ஈடுபட்ட 4 சிப்பாய்கள் கைது!

கொழும்பு, ஏப் 27

கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக 4 இராணுவ சிப்பாய்கள் இராணுவப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இரத்தினபுரி, தலங்கம, ஹோமகம பகுதிகளில் சில வீடுகளில் புகுந்து பலலட்சக் கணக்கான ரூபா பெறுமதியான நகைகள், ரொக்கப் பணம்ஆகியவற்றை கொள்ளையடித்ததற்காகவே இவர்கள் கைது செய்யப்பட்டனர்என்று கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் தெரிவித்தது.

## மாகாண சபை (விசேட) சட்டம் அரசமைப்புக்கு அமைவானது

கொழும்பு, ஏப்ரல் 27

அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதற்கான மாகாண சபை (விசேட) சட்ட மூலம் அரசியலமைப்புக்கு அமைவாக உள்ளது என்று உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதனை சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

இச்சட்ட மூலம் அரசியலமைப்புக்கு உட்பட்டதா என்பதை ஆராய்ந்து தெரிவிக்கும்படி அரசு உயர் நீதிமன்றத்தைக் கேட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து இது சம்பந்தமான விசாரணை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மூவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## விலகிய டாக்டர்களுக்கு வேலை

அரச சேவையில் இருந்து விலகி வெளிநாடு சென்ற டாக்டர்களும் தாதிமார்களும் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

சுகாதார மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் இந்தத் தீர்மானத்தை எடுத்து இருக்கிறார்.

முதற்கட்டமாகத் தாயகம் திரும்பியுள்ள 20 வைத்திய நிபுணர்களுக்கும் விரைவில் வேலை வழங்கப்படவிருக்கிறது.

(உ–எ)

## யாழ்ப்பாணத்திற்கு புதிய எஸ். பி.

யாழ். மாவட்டத்திற்கு புதிய பொலீஸ் அத்தியட்சகராக திரு. ரி. கே. ஜெயராஜா நியமிக்கப்பட்டுள்ளார்..

எதிர்வரும் 5 ஆம் திகதி இவர் தமது பதவியைப் பொறுப்பேற்பார்.

தற்பொழுது பாணந்துறையில் அத்தியட்சகராக செயற்பட்டு வரும் திரு. நவரட்ணராஜா முன்னர் யாழ். அத்தியட்சகராக நியமிக்கப்பட்டிருந்தார்

எனினும் அவர் இப்பதவியை இதுவரை பொறுப்பேற்கவில்லை.

[உ-9]

## முறைசாராக் கல்வி நெறிக்கு மீண்டும் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

யாழ். கல்வித் திணைக்களத்தினால் நடத்த ஏற்பாடு செய்யப்பட்ட முறைசாராக் கல்வி கற்கை நெறிகளுக்கு பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை மீண்டும் ஒரு தடவை – மே மாதம் 4-ம் திகதி – நடைபெற உள்ளது.

கடந்த 16 ஆம் திகதி நடந்த நேர்முகப் பரீட்சையில் தோற்றத் தவறிய பரீட்சார்த்திகளிற்கே இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்குச் சுமார் ஆயிரத்து 200 பேர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் 700 பேரே நடைபெற்று முடிந்த நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்றியிருந்தனர்,

எஞ்சியுள்ளோருக்காகவே மற்றொரு தடவை நேர்முகப் பரீட்சைக்கு ஏற்பாடு செய்

(6ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



புதுசு புதுசாத் திட்டங்களை அறிவிச்சா மட்டும் போதுமே? அதுகளை செயற்படுத்தவும் வேணும் கண்டியளோ .. .. !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

3 மாதம் நிரம்பிய பெடி ஒறி பெண் அல்சேஷன் குட்டியும், 2 வயது பொமனேறியன் ஆண் நாயும் விற்பனைக்கு உண்டு தொடர்பு. 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி. [281]

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒரு நாள் 'Sheina Farm' Rose Broilers B 380 பிரவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் 12. 05. 1989 இல் இருந்து ஒவ்வொரு கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்யவும். விபரங்களுக்கு: R. S. K. Poultry Farm, Post Office Road, Manipay, R. S. K. Poultry Farm, Murugapathy Uduvil. (மான்ஸ் பாடசாலைக்கு அருகாமை, டச்சு றேட்) (247)

கறுப்பு சேவற் குஞ்சுகள், Hisey, Brownசேவற்குஞ்சுகள், புறெயிலர் குஞ்சுகள், வியாழக்கிழமை 27- 04- 89 இலும், வெள்ளிக்கிழமை 28-4-89 இலும் விநியோகிக்கப்படும். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். [278]

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) [Lohmann) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள், [Cobb] புறெயிலர்குஞ்சுகள் [2.5.89] செவ்வாய்க் கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். கூடுதலாக எடுப்பவர்களுக்கு சலுகையுண்டு. முன்கூட்டியே பதிவுசெய்க. இல 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்] (10692)

### தேவை

சப்ளேயர், சமையல் மற்றும் பேக்கறி வேலைகளுக்கு முன் அனுபவமுள்ள ஆட்கள் தேவை. நேரில் அல்லது கடிதம் மூலம் விண்ணப்பிக்கவும். வேலை பழகவிரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். சுபாஸ் கபே, 176, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [276]

இரும்புக் கடைக்கு பில் கிளாக்காக பணியாற்ற ஆங்கில அறிவுள்ள பெண் கிளாக் தேவை. மாநகரசபை எல்லைக்குள்வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. 493, C/o உதயன், யாழ்ப்பாணம். [256]

### வாடகைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அடிப்படை வசதிகள் உடைய தனிவீடு வாடகைக்குத் தேவை. தொடர்புகளுக்கு மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். [C/2375)

### போட்டோஸ்ரற்

காலை முதல் மாலை வரை மிகவும் தெளிவாகவும் விரைவாகவும் போட்டோஸ்ரற் பிரதிகள் எடுக்கப்படும். கூடுதல் பிரதிகளுக்கு கழிவு உண்டு. நாடுவோர்: மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரிவீதி, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (C/2292)

### VACANCY

Vacancy exist for an Accounts clerk and for a person who has done Hotel Management Course in a Leading School of Hotel Management. Apply on, or before 30 th to M/s Yarl Chinese Restaurant, (Pvt) Ltd. First Cross Street, Jaffna. (265]

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

### பயிற்சி வகுப்புகள்

றேடியோ, ரீ.வி. டெக், வீடியோ, றெப்ரிஜிரேஷன், ஏர்கேண்டிஷன், வயறிங், வெல்டிங், றிவைண்டிங், மோட்டார் மெக்கானிசம், Spoken English ஆகியன 29- 04-1989 ஆரம்பமாகிறது. பதிவுக்கு: Nesta Technical Institute 59, Station Road, Jaffna. (268)

### SPOKEN ENGLISH

Spoken Eng ish புதிய பிரிவு சர்வகலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் வசதியை முன்னிட்டு, ஆரம்பம் 29-4-89 சனி/ஞாயிறு நாட்களில். நேரம் 2-30—4-00 p.m தொடர்பு:- S. B. Iyar இல. 12, வைமன் வீதி, நல்லூர். (10663)

### கற்கை நெறிகள்

வழக்கமாக நடைபெறும் வகுப்புக்கள் உடை தைத்தல், கேக்வகை தயாரித்தல், மணமகள் உடையலங்காரம், சிகையலங்காரம், மணவலங்காரம் மற்றும் பலதரப்பட்ட நுணுக்க வேலைகள் தொடர்ந்து நடைபெறும். தொடர்பு கொள்க: நிர்வாகி அனிற்ற அழகியற்கலை நிலையம், பூநாறி மரத்தடி, Anita School, K. K. S. Road, Kokuvil. (263)

### பிரத்தியே வகுப்புக்கள்

9ஆம், 10ஆம் வகுப்பிற்கான வர்த்தகமும், கணக்கியலும் 01- 05-89 இல்இருந்துஆரம்பமாகின்றது. ஒரு வகுப்பில் 10 பேர் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். விஷேட பயிற்சிகளும் இடம் பெறும். இன்றே உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்: ஆசிரியர், 200, அரசடி வீதி, கந்தர்மடச்சந்தி யாழ்ப்பாணம். [267]

### வகுப்பு

A/L 91 இரசாயனம் 108 Brown Road A/L 91 அடிப்படை இரசாயனம் முதல் வகுப்பு ஆரம்பம். ஆசிரியர் சத்தீஸ் பிரிவு I ஆரம்பம் 2-5 89 செவ்வாய் 6.30 a.m (செவ்வாய், வியாழன் 6.30 a.m) பிரிவுII ஆரம்பம் 30-4-89 ஞாயிறு 11a.m. [சனி ஞாயிறு 11 a.m.) (261)

## விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**A/L 91 புதிய பிரிவு**

சனி, ஞாயிறு (காலை 9.00)

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பொருளியல்:- | திரு. கலாசரன் |
| வர்த்தகவியல்:- | திரு. லங்கா |
| கணக்கியல்:- | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல்:- | திரு. சுப்பிரமணியம் |
| இந்துநாகரிகம் / இந்து சமயம் | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ்:- | திரு. குழந்தை |
| புவியியல்:- | திரு. குணராஜா |
| அரசியல்:- | திரு. மஃறூப் |

முக்கிய குறிப்பு

இந்த ஆசிரியர்கள் இந் நிறுவனத்தில் மட்டுமே ஒருங்கிணைந்து போதிக்கின்றார்கள்.

கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு 15 வருட காலமாக உறுதியானதும் நிலையானதுமான ஒரேயொரு நிறுவனம்.

[சி-2363]

## COMMERCIAL ACADEMY

1st Lane, Power House Road,
JAFFNA.

**90,91 A/L கலை, வர்த்தகம்**

| | | |
|---|---|---|
| ECONOMICS | — | லோகசிங்கம் |
| ACCOUNTS | — | யோகராஜா |
| COMMERCE | — | தேவா |
| LOGIC | — | சந்திரராஜா |

**ஆரம்பம்: 29. 04. 1989**

**Sat. 10.00 a. m.**

[சி/2376]

யேசு. மரி. சூசை. துணை

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

"குணக்குன்றே குயின்ரிலா — உன் நினைப்பொன்றே வரும் உலா"



**அமிர்தவாசகம் குயின்ரிலன் பிரான்சிஸ்**

ஆண்டவன் படைப்பு: 04-06-1952
அநியாய அழிப்பு: 27-03-1989

ஆர்த்தெழும் அலைகடல் அறைகூவும் உனதெழில்
பார்த்தழும் பாரியார் பச்சிளம் பாலகன்
சோர்ந்திடும் சோதரர் தாய் தந்தை நட்புகள்
சேர்த்திடும் செம்மைசேர் அஞ்சலி நினதடி!

இவரின் இறுதிச் சடங்கிற் கலந்து கொண்ட அனைவருக்கும் மலர்வளையங்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மனைவி, மகன், பெற்றோர்,

இல. 22, சென். செபஸ்ரியன் வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

(10688)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



**கந்தசுவாமி பரமேஸ்வரன்**

தோற்றம்: 20- 10- 1968
மறைவு: 14- 03- 1989

உமது ஆத்மா சாந்தியடையப் பாலாவோடை குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்பாளைப் பிரார்த்திக்கும்

தாய், தந்தை, சகோதரர்கள்,
நண்பர்கள்,

பாலாவோடை,
காரைநகர்.

(266)

### வீதியில் கிடந்த பார்சலால் பரபரப்பு

பண்டத்தரிப்பு, ஏப். 27

வீதி ஓரம் கிடந்த மர்ம பார்சல் ஏற்படுத்திய பீதியால் மக்கள் சிதறி ஓடினர்.

கொக்குவில் உப்புமடச் சந்திப் பகுதியில் இச் சம்பவம் நடந்தது.

இராணுவத்தினர் அப் பார்சலை திறந்து பார்த்தபோது களிமண் உருண்டையும் சலூன் சரக்கும் (முடி) இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாம். (க-120)

### கிண்ணியா அகதிகள்

திருமலை, ஏப்ரல் 27

கிண்ணியாவில் இடம்பெற்ற சம்பவங்களையடுத்து இடம்பெயர்ந்த தமிழ்க்குடும்பங்கள் அமைதிப்படையினரின் உத்தரவாதத்தையடுத்து மீண்டும் தங்கள் வீடுகளுக்குச் செல்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

கிண்ணியா மருத்துவமனையில் தஞ்சம் அடைந்த 102 தமிழ்க் குடும்பங்களும் பிள்ளை மணல்குழியில் தஞ்சம் அடைந்த 84 குடும்பங்களும் மீண்டும் ஆலங்கேணிக்குச் செல்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

இவர்களுக்குரிய நிவாரண உதவிகளை வடக்கு - கிழக்கு மாகாண அரசின் புனர்வாழ்வு அமைச்சு சென்ற கிழமை திருகோணமலையிலிருந்து லொறிகள் மூலம் அனுப்பி வைத்தது. (க-150]

### கண்டெடுக்கப்பட்ட கடிதங்கள்

பல கடிதங்களைக்கொண்ட ''ஷொப்பிங்பேக்'' ஒன்று திருநெல்வேலி சந்தை, சைக்கிள் தரிப்பிடத்தில் கடந்த வாரம் கண்டெடுக்கப்பட்டது.

கண்டெடுக்கப்பட்ட கடிதங்கள் அனேகமாக வெளிநாட்டிலிருந்து வந்தவர் ஒருவர் கொண்டு வந்திருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

கடிதங்களைத் தவறவிட்டவர் திருநெல்வேலி சந்தை நிர்வாகிகளுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (10691)

## WANTED IMMEDIATELY

A private dispensary at Madurankuli (seven miles off Puttalam on the main road) requires a retired R. M. P to work on lease or Salary Basis For further details contact me.

V.T.GANESHALINGAM of
No 11, David Road,
JAFFNA.

(10689)

### தேவை

எமது பதிப்பகத்திற்கு பின்வரும் துறைகளில் வேலை செய்வதற்கு அனுபவம் வாய்ந்த வேலையாட்கள் தேவை.

1. உதவி நிர்வாகப் பொறுப்பாளர் - மாத ஊதியம் ரூபா 1000.00 [பட்டதாரிகளுக்கு முன்னுரிமை]
2. பியோன் - மாத ஊதியம் ரூபா 700.00 [20 — 30 வயதிற்கு உட்பட்டோராய் இருத்தல் வேண்டும்]

தகுதியானோர் தகுந்த நற்சாட்சிப்பத்திரங்களுடன் 03 - 05 - 89 காலை 9 மணிக்கு நேரில் சமுகம் அளிக்கவும்.

— அஸ்ரன் பதிப்பகம்

C/o அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[சி-2370]

## ★ NEW BECON ★

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சித்திராலயா ஸ்ருடியோவிற்கு முன்பாக)

**கலை, வர்த்தகம்**

**A/L 90, 91** சனி, ஞாயிறு வகுப்புக்கள் — புதிய பிரிவுகள்

பொருளியல்: வரதராஜன்
வர்த்தகம்: திரு. தேவா
கணக்கியல்: யோகராஜா அளவையியல்: S. S. மனோகரன்
இந்துநாகரிகம்: ஜோதீஸ்வரன் தமிழ்: குழந்தை

**ஆரம்பம்: 29-04-1989**
சனி 10. 00 a.m

[சி-2327]

## நல்லூர் பிரதேசசபை - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல் - 1989

நல்லூர் பிரதேசசபையின், நவீன சந்தை மேல்மாடிக்கடை இல. 16உம், கீழ்மாடிக்கடை இல. 27, 28, 29, 30, 31உம் வாடகைக்கு வழங்குவதற்கான சீல்வைத்த கேள்விகள் 17-5-89 நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரப் பணம், கேள்விப்பத்திர வைப்புப்பணம் ஆகியன செலுத்தியதன் பேரில், நல்லூர் பிரதேசசபை செயலாளரால் 16-05-89 நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும். பத்திரங்களிலேயே கேள்விகள் அனுப்புதல் வேண்டும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு, ஒன்றை 'விசேட ஆணையாளர், நல்லூர் பிரதேசசபை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்' எனவும் மற்றையதை 'உள்ளூராட்சி உதவிஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம், கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்' எனவும் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''நவீன சந்தைக் கடைக்கான கேள்வி - 1989'' என எழுதுதல் வேண்டும்.

எந்தக் கேள்வியையும் ஏற்கவோ அன்றி நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு அதிகாரமுண்டு. கேள்வி அறிவித்தல் நிபந்தனைகள் மற்றும் விபரங்களை காரியாலய வேலைநாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| கடை இல. | கடை விஸ்தீரணம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த தொகை | கேள்வி வைப்பு | கேள்விப் பத்திரப்பணம் |
|---|---|---|---|---|
| மேல்மாடி 16 | 20'-20' | 25,000-00 | 500-00 | 100-00 |
| கீழ்மாடி | | | | |
| 27 | 30'-09' | 150,000-00 | 1000-00 | 100-00 |
| 28 | 17'-10' | 100,000-00 | 1000-00 | 100-00 |
| 29 | 17'-10' | 100,000-00 | 1000-00 | 100-00 |
| 30 | 17'-10' | 75,000-00 | 1000-00 | 100-00 |
| 31 | 17'-10' | 75,000-00 | 1000-00 | 100-00 |

க. சண்முகநாதன்
விசேட ஆணையாளர்,
பிரதேச சபை, நல்லூர்.

நல்லூர் பிரதேசசபை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
24-05-1989.

[சி-2239]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்னுடை போர்த்திக் கௌரவம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

யாழ் வண்ணை ஶ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவ இறுதி நாளான பூங்காவன விழாவில் அம்பிகையின் திருவூஞ்சல்வைபவத்தில் அம்பிகையின் திருவூஞ்சல் பாடப்பெற்றது பதிகத்தைஇனிமையாக இசைத்த யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் தேவார இசைமணி திரு. வீ. என். நவரத்தினத்துக்கு தேவஸ்தானத் தலைவர் திரு. வே. கந்தசாமி பொன்னுடை போர்த்தி அவரைக் கௌரவித்தார்.

அகில இலங்கைத் திருமுறை மன்றமும் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தது. [க]

### முத்துஐயன்கட்டு

# நீர்ப்பாசன அலுவலகம் மீண்டும் பழைய இடத்தில்

## சந்திக் கடைகளைத் திறக்குமாறு வர்த்தகர்களிடம் கோரிக்கை

ஒட்டுசுட்டான், ஏப்ரல் 27

ஒட்டுசுட்டானில் உள்ள முத்துஐயன்கட்டு நீர்ப்பாசன அலுவலகம் மீண்டும் அதே இடத்தில் இயங்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முத்துஐயன்கட்டு நீர்ப்பாசன அலுவலகத்திலும், அரச வதிவிடங்களிலும் இந்தியப் படையினர் கடந்த பல மாதங்களாக முகாமிட்டுள்ளதால் அலுவலகம் பரந்தனுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தது.

இந்தியப் படையினர் அங்கிருந்து வெளியேறப் போவதை அடுத்து அலுவலகத்தையும் வதிவிடங்களையும் திருத்தி அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை அங்குள்ள வர்த்தக ஸ்தாபனங்களைத் திறந்து வியாபாரத்தை நடத்துமாறு படைப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

சந்தியிலுள்ள 42கடைகளில் 8 கடைகளின் கட்டடங்களே இயங்கக்கூடிய நிலைமையில் உள்ளன. ஏனைய கடைகள் உடைத்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. (இ-113)

## தமிழ் மூலமும் சாரணர் பயிற்சி

மீரிகம சாரணர் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் தொடங்க இருக்கும் திரி சின்னத்துகான பயிற்சி நெறி தமிழ்மொழி மூலமும் நடத்தப்படவுள்ளது.

இதுவரை காலமும் ஆங்கிலத்திலும் சிங்களத்திலுமே இப்பயிற்சி நடத்தப்பட்டது.

இப்பொழுது காங்கேசன்துறை மாவட்ட ஆணையாளர் திரு. போஜனின் முயற்சியால் தமிழ்மொழி மூலமும் பயிற்சி நடத்தப்படும்எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-190)

## நவாலி ம. வி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

நவாலி மகாவித்தியாலயத்தின் பரிசுத் தினமும் கலைவிழாவும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிபர் திரு. கே. எம். மாணிக்கத்தின் தலைமையில் நடைபெறும்.

பிரதம கல்வி அதிகாரி திரு. ஏ. தங்கராசா இதில் பிரதம விருந்தினராகவும் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்சயன் கௌரவ விருந்தினராகவும் பேராசிரியர் டாக்டர் ந. சரவணபவானந்தன், திருமதி த. சரவணபவானந்தன் திரு. செ. கதிர்காமத்தம்பி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கின்றனர்.

இந்த விழாவில் மாலையில் நடைபெறும் கலைநிகழ்ச்சிக்கு உபஅதிபர் திரு. எஸ். நாகையா தலைமை வகிப்பார். கலைநிகழ்ச்சிகளுக்குப் பிரதம விருந்தினராக திரு. செ. ஜோ. இளையதம்பி கலந்து கொள்வார். (க)

## மக்கள் வங்கியின் புதிய லொத்தர் திட்டம்

மக்கள் வங்கியும் லொத்தர் ஒன்றை நடத்த உத்தேசித்துள்ளது.

குறைந்தது 10 ஆயிரம் ரூபா பணத்தை நடைமுறைக் கணக்கில் வைத்திருக்கும் வாடிக்கையாளரே இப்பரிசுத்திட்டத்தில் கலந்து கொள்ள முடியும்.

சிங்கப்பூர், மற்றும் பாங்கொக் செல்லும் விமானப் பயண டிக்கட், அங்கு ஹோட்டலில் தங்கும் செலவு ஆகியவற்றை உள்ளடக்கியதாக ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்று அதிகாரி ஒருவர் சொன்னார்.

நாட்டில் உள்ள 316 கிளைகளிலும் வாடிக்கையாளர்கள் இப் பரிசுத்திட்டத்தில் பங்கு பெறலாம் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)



# உடனடியான வேலைவாய்ப்பு

### 1. யப்பான்:

நாங்கள் முன்னர் எடுத்துக்கொண்டு இருந்த கட்டிடப்பகுதி, றெஸ்ரோரன்ட் (RESTAURANT) ஆகிய வெற்றிடங்களுக்குத் தொடர்ந்தும் ஆட்களை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். தொடர்பு கொள்ள விரும்புவோர் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

(வயது: 20 — 42)

### 2. ஓமான்:

ஆண் தையற்காரர்கள்: கல் பதிப்பவர்கள், மேசன், தச்சுவேலையாள், ட்றைவர், மின்னிணைப்பாளர், சாரதிகள், பணிப்பெண்கள், கூலியாட்கள் ஆகியோர் உடனடியாகத் தேவை.

(3 வாரங்களில் பயணம்)

(வயது: 19 - 44)

### 3. குவைற்:

குவைற் நாட்டுக்கு கிளினேர்ஸ் (CLEANERS) வேலைக்கு ஆட்கள் தேவை.

### 4. சவூதி அரேபியா: (Saudi Arabia)

S. O. M. C.

1. மேசன் — MASON
2. தச்சு வேலையாட்கள் — CARPENTERS
3. பிளம்பர் — PLUMBER
4. மின்னிணைப்பாளர் — ELECTRICIAN
5. சாரதிகள் — DRIVERS
6. கூலியாட்கள் — LABOURERS
7. பெயின்ரர் — PAINTERS
8. மெக்கானிக் = MECHANIC

மேற்காட்டிய வேலை விவரங்கள் அறிய விரும்புவோர் எமது ஸ்தாபனத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

## T. V. TRAVELS

BROWN ROAD,
KOKUVIL.

(2355)




# கேள்வி அறிவித்தல்

**பிரதேசக் கல்வித் திணைக்களம், நல்லூர், யாழ்ப்பாணம்**

**ஆசிய அபிவிருத்தி வங்கி - கல்விப் புனருத்தாரணத் திட்டத்தின்கீழ்**

**யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் கட்டிட வேலைகள்**

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1989ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி (26-05-1989) முற்பகல் 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் அதன் எதிரே உள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டிட வேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டுவேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களுக்கு 1989ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி (23-05-1989) பிற்பகல் 2-00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணமாக (ரூபா 50/-) ரூபா ஐம்பதும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக (ரூபா 250/-) ரூபா இருநூற்று ஐம்பதும் செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ் கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகச் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1989ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி (26-05-1989) காலை 10-30 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் அதுபற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றி தெரிவு இரத்துச் செய்யப்படும்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைத்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணையின்படியும் ஒப்பந்தப் பிரமாணங்களின்படியும் தவறாது வேலையைப் பூர்த்தி செய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கட்டிட வேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

செல்வி தி. பெரியதம்பி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்வித் திணைக்களம்
யாழ்ப்பாணம்.
24-05-1989.

| பாடசாலையின் பெயர் | வேலை விபரணம் | பதிவு செய்திருக்க வேண்டியதொகை |
|---|---|---|
| 1. யா/யாழ் மத்திய கல்லூரி யாழ்ப்பாணம். | இரு மாடிக் கட்டிடம்: 48' 9'' x 25' 0'' | ரூ. 700,000/- |
| 2. யா/யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம். | பெருந்திருத்த வேலை. | ரூ. 1,200,000/- |
| 3. யா/யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம். | மூன்று மாடிக் கட்டிடம் 130' 0'' x 25' 0'' | ரூ. 1,750,000/- |
| 4. யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை. | தண்ணீர்த் தாங்கி 2000 கலன். | ரூ. 200,000/- |
| 5. யா/உடுப்பிட்டி அ. மி. ஆண்கள் கல்லூரி உடுப்பிட்டி. | தண்ணீர்த் தாங்கி 2000 கலன். | ரூ. 200,000/- |
| 6. யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி. | சுற்றுமதில் 2000 அடி | ரூ. 500,000/- |
| 7. யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி. | தண்ணீர்த் தாங்கி 2000 கலன் | ரூ. 200,000/- |
| 8. யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி. | பாடசாலை விடுதி. | ரூ. 1,200,000/- |
| 9. யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை, புலோலி. | தண்ணீர்த் தாங்கி 2000 கலன் | ரூ. 200,000/- |
| 10. யா/வரணி ம. வி. வரணி | கூடும் மண்டபம். | ரூ. 800;000/- |
| 11. யா/கரவெட்டி ஶ்ரீ நாரத வித்தி., கரவெட்டி. | மேல்மாடி. 48' 9'' x 25' 0'' | ரூ 300,000/- |
| 12. யா/வீமன்காமம் ம. வி. தெல்லிப்பழை | பாடசாலைக் கட்டிடம், 50' x 20' மேல்மாடிக் கட்டிடம் 48' 9'' x 25' 0'' | ரூ. 800,000/- |
| 13. யா/பலாலி சித்திவிநாயகர் வித்தி., பலாலி. | இருமாடிக் கட்டிடம், 157' 6'' x 25' 0'' சலகூடம் (ஆண்கள் / பெண்கள்) | ரூ. 1,300,000/- |
| 14. யா/கரம்பன் சண்முகநாத வித்தி., ஊர்காவற்றுறை. | பெருந்திருத்த வேலை. | ரூ. 350,000/- |
| 15. யா/காங்கேசன்துறை ம. வி. காங்கேசன்துறை | மேல்மாடிக் கட்டிடம் 68' 9'' x 25' 0'' | ரூ. 700,000/- |

[சி-2238]


# ஏழைகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் சிறந்த திட்டம்

## பயிற்சிக் கருத்தரங்கில் உ. அ. அதிபர்

அச்சுவேலி ஏப், 27

ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட இருப்பதுதான் வறுமை ஒழிப்பு நிவாரணத் திட்டம்.

இந்த திட்டத்தை உரிய முறையில் நிறைவு செய்யும் பெரும் பணி பொது மக்களின் பிரதிநிதிகளாகிய முகவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. முகவர்கள் தமது பணியை உண்மையானசேவை மனப்பாங்குடன் நிறைவு செய்யவேண்டும்.

வலி. கிழக்குஉதவி அரசாங்க அதிபர் திரு. கே. குலேந்திரா மேற்கண்டவாறு கூறினார்.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற பயிற்சிக்கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் தொடர்ந்து பேசியபோது:

சிலநல்ல திட்டங்கள்நடைமுறைப்படுத்தலில் உள்ளபிரச்சினைகளால் தோல்விஅடைந்து விடுகின்றன.

இந்த நிலை வறுமை ஒழிப்பு நிவாரணத்திட்டத்திற்கும் ஏற்படமாட்டாது.

இது மக்களின் பூரண ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்படவுள்ளது. மக்களின் பிரதிநிதிகளாகநியமிக்கப்பட்டுள்ள முகவர்கள் தமது பணியை விருப்பு வெறுப்பு பக்கச்சார்பு இன்றி உரியமுறையில் திறமையாக நிறைவேற்ற வேண்டும் என்றார்.

கருத்தரங்கில் உரையாற்றிய அச்சுவேலி தெங்கு பனம் பொருட்கள் அபிவிருத்திச் சங்க பொதுமுகாமையாளர் திரு. கு. கணேசன்பேசுகையில்

நிவாரணத்திட்டங்களில் மிக கீழ்மட்டத்தில் வறுமைக் கோட்டின்கீழ்வாழும்குடும்பங்கள் ஏமாற்றப்பட்டுள்ளன. இதனைஉணவுமுத்திரைத் திட்டத்தின் மூலம் கண்டுகொள்ள முடிகின்றது.

யாருக்கு உணவுமுத்திரை கிடைக்கவேண்டுமோ அவர்களுக்கு அதுகிடைப்பதில்லை. வசதியானவர்கள் தவறான விவரங்களைசமர்ப்பித்துஉணவு முத்திரைகளை பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலை வறுமை ஒழிப்பு நிவாரணத் திட்டத்திற்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்றார்.

அச்சுவேலி தெற்கு கிராம சேவையாளர் திரு. இ. கணேசலிங்கம் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். (க-11)

# ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் சிலருக்கு இடமாற்றம்

யாழ். ஆஸ்பத்திரிப் பொலீஸ் பிரிவில் கடமையாற்றிய பொலீஸாரில் சிலர் யாழ். கோட்டைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை குடாநாட்டிற்குள் இயங்கும் ஏனைய பொலீஸ் நிலையங்களில் கடமை ஆற்றிய பொலீஸார் யாழ். ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஆஸ்பத்திரி பொலீஸ் பகுதியில் கொள்ளைகள் சம்பந்தமான முறைப்பாடுகள் ஏற்பதும் நிறுத்தப்பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் ஏற்படும் மரணங்கள் தொடர்பாகவே பொலீஸ் பிரிவில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. (ஒ-10)



# NEW BECON

## பட்டப்படிப்புக்கள்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
( சித்திராலயா ஸ்ரூடியோ முன்பாக )

## G. A. Q., B. A. வகுப்புகள்

பொருளியல்:- — வரதராஜன்
தமிழ்:- — குழந்தை
இந்துநாகரிகம்:- — காரை சுந்தரம்பிள்ளை
அரசியல்:- — தமீம்
மெய்யியல்:- — சந்திரராஜா

**ஆரம்பம்: 29. 04. 1989**
சனி 9. 00 a. m.

(சி/2365)




## அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவுகள்

குருநகர், தொடர்மாடி
சென். லூட்ஸ் விளையாட்டுக்கழக மைதான திருத்தவேலை நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச்சீட்டு 25-4-89 செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது.

பரிசுபெறும் இலக்கங்கள் பின்வருமாறு :
1ஆம் பரிசு இல. 1686
2ஆம் பரிசு இல. 1617
3ஆம் பரிசு இல. 2040

ஆறுதல் பரிசுகள் இலக்கங்கள் :
2618, 799, 399

பரிசுக்கு உரியவர்கள் தொடர்மாடி E 3 இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(10685) சென். லூட்ஸ் விளையாட்டுக் கழகம்




## பிரெஞ்சு மொழி வகுப்புகள்
## LEARNING FRENCH

**Join the Alliance Francaise de Jaffna**

for Beginers and Others
New Term Commences on 05-05-89

**Information and Registration:**

யாழ் பிரெஞ்சு நட்புறவுச் சங்கம்
Alliance Francaise De Jaffna
130, 1st. Cross Street,
JAFFNA.

[சி-2346]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மென் பந்து கிரிக்கெட் போட்டி

மண்டைதீவு ஏப்ரல் 27

மண்டைதீவு கிறிஸ்தவ இளைஞர் அணிக்கும் சைவ இளைஞர் அணிக்குமிடையில் சினேகபூர்வமான மென்பந்து கிரிக்கெட் போட்டி ஒன்று 21 ஆம் திகதி நடைபெற்றது.

கிறிஸ்தவ இளைஞர் அணி ஒரு இனிங்ஸில்102 ஓட்டங்களினால் சைவ இளைஞர் அணியை தோற்கடித்தது. [க-88]

## ஜொனியன்ஸ் நடத்தும் கிரிக்கெட்
# அரை இறுதி ஆட்டம் 29 இல்

யாழ்ப்பாணம். ஏப்ரல் 27

பெனின்சுலா குறூப் ஸ்தாபனத்தின் ஆதரவுடன் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் பெனின்சுலா வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள் 29 ஆம் திகதி சனிக்கிழமை சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் போட்டியில் கொக்குவில் சனசமூக நிலைய அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் [பி] விளையாட்டுக் கழகமும் மாலை நடைபெறும் போட்டியில் ஷப்ரு அணியை எதிர்த்து ஜொலிஸ்டார் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன. (இ-6)



## 10ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:

21- 04- 1950

மறைவு:

27- 04- 1979

### மகேசன் வரதராஜன்

உன் ஆத்மா சாந்தியடைவதாக!

தங்கள் பிரிவால் துயருறும்
என்றும் அன்பு மறவாத
மனைவி, மகள், சகோதர சகோதரிகள்,
மைத்துனர்மார், மைத்துனிமார், மருமக்கள்,
உறவினர், நண்பர்கள்.

'லிங்கவாசா'
நவாலி (254]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. நாகலிங்கம் பாலகிருஷ்ணர்
(பத்தர்) அவர்கள்

அன்னையின் மடியில்: 09 - 11 - 1920

ஆண்டவன் அடியில்: 09 - 05 - 1988

திதி: 27 - 04 - 1989

''நெருநலுள னொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு''

பாசமிகு 'ஐயா' அன்புத் 'தெய்வம்' ஆகி
பாரில் ஓராண்டு மறைந்து விட்டதே!
பூவிதழின் மென்மையிலும் மென்மையான
புனிதமான அன்பு உள்ளத்தால் எங்களை
அரவணைத்து நன் மக்களாக்கிய
அன்பின் 'ஐயா' சென்று ஆண்டொன்றானதே!
கண்ணில் வடிகின்ற கண்ணீர் காயுமுன்பே
பண்பின் 'ஐயா' மறைந்து ஆண்டொன்றானதே!
மண்ணில் தோன்றி விண்ணிற்கு விரைந்து
ஆண்டவன் அடியை அரவணைத்த ஐயாவே!
எண்ணற்ற உங்கள் இலட்சியங்களை - நாம்
திண்ணமாய் நிறைவேற்ற உறுதி கொண்டுள்ளோம்
ஆண்டு எத்தனை சென்றாலும் – எங்களை
ஆண்டு நிற்கின்ற உங்கள் நினைவுகள் அகலாது.
மங்காத உங்கள் பெருமை காத்திடுவோம்!

உங்கள் ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மணியகாரன் வீதி,
தெல்லிப்பழை. [10650]

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

ஊர்காவற்றுறை. ஏப்ரல் 27

கருவில் விளையாட்டுக் கழகம் தனது முதலாவது வருட ஆண்டு நிறைவையொட்டி உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை நடத்தத் தீர்மானித்துள்ளது.

தீவுப்பகுதிக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்கள் மாத்திரம் பங்குபற்றக்கூடிய இச் சுற்றுப்போட்டிகளுக்கான அறிவித்தல்கள் விரைவில் அந்தந்த விளையாட்டுக் கழகங்களுக்கு அனுப்பிவைக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. [க-16]

## நிவாரணம் கிடைக்கவில்லை

பச்சிலைப்பள்ளி, ஏப். 27

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புனர்வாழ்வு நிவாரணப்படிவம் பெற்றவர்களில் சிலருக்கு நிவாரணப் பணம் கிடைக்கவில்லை.

அத்துடன் வீடுகள் எரிக்கப்பட்டு சேதமாக்கப்பட்டவர்களுக்கு பதினையாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக கூறப்பட்ட போதிலும் இதுவரை எந்தவித பணமும் கொடுக்கப்படவில்லை எனவும் நிவாரணப்படிவத்திற்காக மேன்முறையீடு செய்தவர்களுக்கும் படிவம் வழங்கப்படவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

## வியாபாரம் மந்த நிலையில்

கொழும்பு, ஏப் 27

கொழும்பு நகரிலும் சுற்றுப்புறங்களிலும் வியாபாரம் மந்தநிலையிலேயே நடைபெற்றுவருவதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புதுவருடக் கொண்டாட்டத்துக்காக சென்ற வர்த்தகர்கள் திரும்பி வராததாலும் வெளியூர் வாகனங்கள் இன்னும்வரத் தொடங்காததுமே இந்த மந்தநிலைக்குக் காரணம் எனத் தெரிகிறது. (ஓ-எ)

## 305 குடும்பங்களுக்கு நிவாரணம்

ஒட்டுசுட்டான். ஏபரல் 27

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 305 குடும்பங்களுக்கு இலவச நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

புதுக்குடியிருப்பு உ. அ. அதிபர் பிரிவில் உள்ள படைமுகாம்களின் சுற்றாடலில் இருந்து இடம்பெயர்ந்தவர்களும் படையினரால் கைது செய்யப்பட்டு பல மாதங்களின் பின் விடுதலை செய்யப்பட்டவர்களும் இதில் அடங்குவர். (இ-114)

வரட்சி நிவாரணம்:

## ஜப்பானிய செஞ்சிலுவை உதவும்

கொழும்பு, ஏப்ரல் 27

வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் வரட்சி நிவாரணப் பணிகளுக்கு உதவ ஜப்பானிய செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்திருக்கிறது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக இந்த நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்று ஜப்பானிய செஞ்சிலுவைச் சங்க விசேட பிரதிநிதி தெரிவித்தார். (அ-எ)

### பாராட்டித் தீர்மானம்

யாழ்ப்பாணம். ஏப். 27

சுன்னாகம் தபால் நிலைய அதிபர் திரு. இ. திருநாவுக்கரசின் சேவையைப் பாராட்டி சுன்னாகம் வடக்கு வரியப்புலம் சனசமூக நிலையம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. (இ)

## ஐயனார் ஆலயத்தில் திருட்டு

பண்டத்தரிப்பு, ஏப்ரல் 27

பண்டத்தரிப்பு பாரத்தனை ஐயனார் ஆலயத்தில் தொங்கு மணிகளும், களஞ்சியத்தில் இருந்த சில விலை உயர்ந்த பொருகள்களும் திருடப்பட்டுள்ளன. திருட்டுப்போனபொருள்களின் பெறுமதி சுமார் ஐயாயிரம் ரூபா என மதிப்பிடப்படுகிறது.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திரு. V. K. ஆறுமுகம்
[Retd. S. P.]

மண்ணுலகில்: 19- 08- 1911

முருகன் அடியில்: 28- 03- 1989

பாசத்தின் திருவிளக்காய்த் திகழ்ந்த குடும்பத்தின் ஒளிவிளக்கே! அன்பின் பிறப்பிடமே! எம்மை அன்பால் வளர்த்த ஆருயிரே! உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

27- 4 89 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் குடும்பசகிதம் வருகைதந்து மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்.

''மீனு பவனம்''
கரவெட்டி. (10678)

உ
சிவமயம்

## 16 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திரு.இரத்தினசாமி ஐயர் தங்கராஜா ஐயர்
(பண்டார ஐயர் செல்வச்சந்நிதி ஆலய பிரதம குருக்கள்)

மானிடத்தாயின் மடியில்: 22-0?-1931
மலைமகள் சேயின் அடியில்: 13-04-1989

திதி 28 - 04. 1989

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயப் பிரதம பங்காளரும் பிரதம பூசகருமான இரத்தினசாமி ஐயர் தங்கராஜா ஐயர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 28 - 04 - 1989 வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ்வைபவத்தின் போது சமுகந்தந்து அவரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம். தனித்தனி அழைப்பு விடுக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி மறைந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

செல்வச் சந்நிதி.
தொண்டைமானாறு. (277)

## ஓராண்டு நினைவஞ்சலி



### சங்கரப்பிள்ளை சிவவரதன் (வரதன்)
[ மகாஜனக் கல்லூரி வர்த்தகப் பிரிவு மாணவன் ]

அன்னை மடியில் : 11-10-1969

இறைவன் அடியில் : 08-05-1988


திதி ; 27-04-1989

தவத்தின் பயனாய் அவதரித்த தவப்புதல்வனே!
கல்வியிலும் சேவையிலும் கோயில் தொண்டிலும்
கருத்துடனே உயர்ந்து நின்று
சிரித்துப் பேசியநீ ஒரு நிமிட நேரத்தில்
சிறகடித்து சிட்டாகப் பறந்துவிட்டாய்!
சிரித்த உன்வதனம் கலகலத்த உன்பேச்சு
இனி எங்கு காண்போமடா?
ஓராண்டு நிறைந்தாலும் உன் நினைவு
ஒருபோதும் மாறாதடா!

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அக்காமார்,
தம்பிமார். தங்கை.

நகுலேஸ்வர வீதி,
கருகம்பனை. [190]

## ஓராண்டு இதயப் பூக்கள்



### முருகேசு ஜெயக்குமார்
(மோகன் மாஸ்ரர்)

தோற்றம்: 03-05-1962

மறைவு: 27-04-1988

இத் தரை உயிர்த்தெழ
இல்லத்தை மறந்து நீ
முழங்கிய வார்த்தையும்
வழங்கிய தலைமையும்
உளங்களில் கலந்து இன்றும்
உணர்வூட்டி நிற்கிறது......

உப்பு வெளித் திடலில்
உன் வாழ்வு முடிந்தாலும்
உப்பு வெளிக் காற்றினிலே
உன் குரலும் கேட்கிறது......

உப்பு மண் அள்ளியள்ளி
ஊரெல்லாம் சொரிகையிலே
தம்பி அக்கா தாயாரின்
தாகம் பெருகுகிறது......

இவருடன் மரணமடைந்த முரளி, பட்சம் அவர்களுக்கும் எமது முதலாம் ஆண்டு நினைவஞ்சலி!

பிரிவால் துயருறும்:
அம்மா, அக்கா, தம்பி.

சோழங்கன்,
கரணவாய் தெற்கு. (262)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**
உண்ணற்க கள்ளை உணில் உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்.

**பொருள்:**
கள்ளை உண்ணக்கூடாது; சான்றோரால் நன்கு எண்ணப்படுவதை விரும்பாதவர் கள்ளை உண்ண வேண்டுமானுல் உண்ணலாம்.

உதயன்
இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
27- 04 - 1989 த. பெ. இல: 23

## கூட்டுறவுச் சேவை

கூட்டுறவுச் சங்கங்கள் வெறும் வர்த்தக நிறுவனங்களாக மட்டும் அல்லாமல் கல்வி, கலை, கலாசாரத் துறைகளின் வளர்ச்சிக்கும் பணியாற்ற வேண்டும் என ஓர் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

அநேகமான கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்தின் உணவுப் பொருள், விற்பனை நிலையங்களாகவே இன்னும் விளங்குவதைக் காண்கிறோம். தனியார் துறையுடன் போட்டி போட்டு வர்த்தகம் செய்து, லாபம் தேடக்கூடிய அளவுக்கு பெரும்பாலான சங்கங்கள் இன்னும் பலம் அடையவில்லை.

கூட்டுறவுச் சங்க அமைப்பு முறைகளில் மாற்றம் கொண்டுவரப்பட்டு, அவை ஓரளவு தன்னிச்சையாக இயங்க அனுமதிக்கப்பட்ட பின்னரும், எதிர்பார்த்த வளர்ச்சியைக் காணமுடியவில்லை. விதிவிலக்காக ஒரு சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், உற்பத்தித்துறைகளில் ஈடுபட்டு அந்தந்தப் பகுதிப் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவி உள்ளன; உதவுகின்றன என்பது உண்மைதான்.

எனினும் பொதுவாக, பரந்த அளவில், சிறப்பித்துக் கூறுமளவுக்கு கூட்டுறவுத்துறை வளர்ச்சி காணவில்லை என்பதே சரியான நிலைமை.

ஆகவே முதலில் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பிரதான நோக்கமான உணவுப் பொருள், மற்றும் பாவனைப் பொருள் விநியோகத்தைச் சீராகச் செய்ய வேண்டும். உணவுத் திணைக்களப் பொருள்களின் விநியோக நிலையங்களாக மட்டும் அல்லாமல், தனியார் துறையுடன் போட்டி போட்டுக் கொண்டு மக்களுக்குச் சேவை செய்யும் வர்த்தக நிலையங்களாக அவை மாற வேண்டும்

அதற்கு உதவும் விதத்தில் அரசு, கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போதிய அதிகாரங்களை வழங்க வேண்டும். வேண்டாத, நடைமுறைக்கு ஒவ்வாத, மக்கள் சேவைக்கு இடையூறாக உள்ள சிவப்பு நாடாக்களை அகற்றிவிட வேண்டும். அத்தோடு கூட்டுறவுச் சங்கம் ஒன்று அந்தக் கிராமத்தின் பாவனைப் பொருள் தேவையைப் பூர்த்தி செய்யும், பூரணத்துவமான மக்கள் வர்த்தக நிலையமாக விளங்கவும் சகல உதவிகளையும் அரசு வழங்குதல் அவசியம்.

பிரதான பணி சீராகவும், தடங்கல் இன்றியும் பூரணத்துவமாகவும், மக்களுக்குத் திருப்திதரும் விதத்திலும், சிறப்பாகவும் நடைபெறுவதாகக் கண்ட பின்னர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அந்தந்தப் பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு, வேலைவாய்ப்புத் துறைக்கு உதவக்கூடிய உற்பத்தித் துறைகளிலேயே கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பிட்ட பகுதியின் மூலவளங்களைப் பயன்படுத்தும் கைத்தொழில், விவசாய உற்பத்தித் துறைகளில் காலடி எடுத்து வைக்கலாம். அதுவும், வெறுமனே எழுந்தமானத்தில் அல்லாமல், திட்டமிடப்பட்ட முறையில், உரிய நிபுணத்துவ ஆலோசனை பெறப்பட்டு, குறுகிய காலத்திட்டங்கள், நீண்ட காலத்திட்டங்கள் என வகுக்கப்பட்டே உற்பத்தி முயற்சிகளில் ஈடுபட வேண்டும். ஆரம்பத்தில் குறுகிய காலத்திட்டங்களைச் செயற்படுத்தி, அவற்றில் வெற்றி காண, லாபம் பெற உழைத்து அதன் பின்னரே நீண்ட காலத் திட்டங்களில் கை தொட வேண்டும்.

வர்த்தகப் பணியும், பொருளாதாரப் பணியும் சரிவர நடக்கின்றன என்று கண்ட பின்னரே ஏனைய துறைகளில் ஈடுபடுவது குறித்துப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆலோசிக்க வேண்டும். கல்வி, கலை, கலாசாரத் துறைகளுக்கு ஊக்கம் அளித்து உதவும் மட்டத்தில் முதலில் நின்று கொண்டு, முக்கிய பணிகள் சரியாக நடக்கின்றன என்ற திருப்தி நிலையைச் சம்பாதித்த பின்னர் மட்டுமே கல்வி போன்ற துறைகளில் நேரடியாக ஈடுபடுதல் வேண்டும்.

எல்லாத் தொழிலிலும் கை தொடும் ஒருவர் எந்தத் தொழிலையும் சரிவரச் செய்யமாட்டார் என்று ஒரு பழமொழி உண்டு. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாத் துறைகளிலும் ஈடுபடுவதும் அவ்வாறே ஆகும்.

மக்களுக்கு உரிய பிரதான பணியான வர்த்தகத்தைச் சீராக நடத்த முடியாமல் பல கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகங்கள் திண்டாடுகின்றன; முரண்படுகின்றன. நிர்வாகிகளிடையே கருத்து வேற்றுமை, பொருமை மற்றும் துஷ்பிரயோகம், முறைகேடுகள் என்று பல வினங்கள் நிரம்ப உண்டு.

அந்தப் பலவீனங்களோடு பல துறைகளிலும் ஈடுபட்டுச் சிறப்புற இயக்குவிக்கக் கூடிய ஆளுமையும், திறமையும், எல்லா பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளிடமும் இருக்குமா? தனிப்பட்ட சேவை என்றில்லாது, மக்கள் சேவை என்று மனம் வைத்துப் பணிபுரியும் பக்குவம் எல்லா நிர்வாகிகளிடமும், அடிக்கடி மாறும் நிர்வாகிகளிடத்தும் இருக்குமா என்பதும் பெரும் கேள்விக்கு உரியதாகும்.

கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்கு, சமூகத்துக்கு நற்பணிகள் புரிவதற்கு அவற்றின் நிர்வாகிகள் உண்மையான சேவை உள்ளம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். தம்மை அர்ப்பணித்துத் தொண்டு செய்பவர்களாக இருக்க வேண்டும். கூட்டுறவுச் சேவை சிறக்க அதுவே முதற் தேவை.

---

இராஜிஞமாவை அறிவித்த

# பிரதமரின் உதவியாளர் தற்கொலை; ஜப்பான் அரசியலில் புதிய திருப்பம்!

### ஊழல் விசாரணை தீவிரமடைகிறது

டோக்கியோ, ஏப்ரல் 26
ஜப்பான் பிரதமரின் முன்னுள் அந்தரங்கச் செயலாளர் திரு. கியோகி நேற்றுத் தற்கொலை செய்து கொண்டார்.

ரெக்ரூட் ஊழல் மோசடி சம்பவத்துக்கான அரசியல் ரீதியான பொறுப்பைத்தான் ஏற்று இராஜிஞமாச் செய்வதாக ஜப்பான் பிரதமர் தாகேஷிட்டா அறிவித்த சில மணித்தியாலயங்களில் இவர் தற்கொலை செய்து கொண்டது அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஊழல் மோசடியில் திரு. கியோகி நேரடியாகச் சம்பந்தப்பட்டார் என்று குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார்.

தற்கொலை செய்த திரு. கி.யோகி 30 ஆண்டுகளாக ஜப்பான் அரசியலில் தீவிர பங்கெடுத்து வந்தார்.

இராஜிஞமாச் செய்யப்போவதாக அறிவித்திருக்கும் பிரதமரின் உதவியாளராக பல ஆண்டுகள் இருந்தார்.

ரெக்ரூட் வெளியீட்டகம் ஒன்றிடமிருந்து அரசுச்செல்வாக்கைப் பயன்படுத்தி ஆளும் கட்சிக்கும் தனிப்பட்ட ரீதியிலும் பணம் பெற்றுக் கொண்டனர் என்று வெளியான குற்றச்சாட்டைத் தொடர்ந்து நிதி அமைச்சர் உட்பட 3 அமைச்சர்கள் ஏற்கனவே இராஜிஞமாச் செய்து விட்டனர்.

ஆளும்கட்சி உறுப்பினர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர். [எ]

## லெபனுனில் அமைதி திரும்ப அரபு லீக் தீவிர முயற்சி

ரூனிஸ், ஏப்ரல் 26
லெபனுனில் நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வரும் முயற்சியில் அரபு லீக் ஈடுபட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ரூனிஸில் நடைபெறும் அரபு லீக் உயர்மட்டக் கூட்டம் ஒன்றில் இது பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

இக் கூட்டத்திற்கு குவைத் பிரதிநிதி தலைமை வகிக்கிறுர்.

லெபனுனில் யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க அரபு நாடுகளின்பிரதிநிதிகள் அடங்கிய அவதானிப்புக் குழு ஒன்றை அனுப்புவது.

லெபனுன் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டி ஜனுதிபதி ஒருவரை தெரிவு செய்வது —

இந்த இரண்டு விஷயங்களையும் உடனடியாக நிறைவேற்றுவதன் மூலம் லெபனுனில் அமைதியைக் கொண்டு வரலாம் என்று அரபு லீக் நம்புகிறது. (எ)

## மரண தண்டனையை ஒழிக்க மன்னிப்புச் சபை சிபார்சு!

லண்டன், ஏப்ரல் 26
மரணதண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை உலக நாடுகளுக்கு விண்ணப்பித்துள்ளது.

அரசியல் வன்செயல்கள் மற்றும் குற்றச் சம்பவங்களை மரணதண்டனை மூலம் நிறுத்தி விடலாம் அல்லது குறைத்து விடலாம் என்பதற்கு ஆதாரமே கிடையாது என்று சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

கடந்த பத்து ஆண்டுகளாக உலகின் பல நாடுகளில் ஆயிரக்கணக்காளுேர் மரணதண்டனைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

மரண தண்டனையை அடிக்கடி பாவிக்கும் நாடுகளாக உலகில் சீனு, தென் ஆபிரிக்கா, ஈரான் ஆகியன உள்ளன.

சீனுவில் குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக 1983 இல் இருந்து மரணதண்டனை தீவிரமாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

1983 முதல் 1987 வரை சீனுவில் குறைந்தது 30ஆயிரம் பேர் வரை மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இப்படி சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (எ)

### மொரிட்டானியாவில் படுகொலை!

நொக்கோட், ஏப்ரல் 26
மொரிட்டானியா நாட்டில் செனகல் நாட்டைச் சேர்ந்தவர்கள் புகுந்து சுட்டதில் 17 பேர் கொல்லப்பட்டனர்.

600 பேர் வரையில் இத் தாக்குதலில் காயமடைந்தனர்.

இதைத் தொடர்ந்து இரவு நேர ஊரடங்கு மொரிட்டானியாவில் பிரகடனப்படுத்தப் பட்டது. (எ)

---

சோவியத் படைகளின்

## ஜோர்ஜியா நச்சுவாயு பிரயோகம் பற்றி விசாரணை

### அமெரிக்கா கோரிக்கை

வாஷிங்டன் ஏப்ரல் 26
ஜோர்ஜியா மாநிலத்தில் ஆர்ப்பாட்டஞ் செய்த மககள் மீது நச்சு வாயுப் பிரயோகம் செய்த செயலை அமெரிக்கா வன்மையாககண்டித்துள்ளது.

இச் செயல் குறித்து பூரணமானசுதந்திரமான விசாரணை ஒன்றை நடத்த வேண்டும் என்றும்அமெரிக்கா சோவியத் யூனியனைக் கேட்டுள்ளது.

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து செல்லும் உரிமை கோரி ஜோர்ஜியாவில் மக்கள் சிலவாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 19 பேர் கொல்லப்பட்டனர்.

சோவியத் படையினர்நச்சு ஆயுதங்களை பிரயோகித்தனுல் அவர்கள் இறந்தனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டது.

ஜோர்ஜியா மாநிலக் கம்யூனிஸ்ட் கட்சியின்புதிய தலைவராகப்பொறுப்பேற்றுள்ளவரும் நச்சுவாயுப்பிரயோகம் நடத்தப்பட்டதை ஒப்புக் கொண்டிருக்கிறுர். [எ]

### வடகொரிய பெண்ணுக்கு மரண தண்டனை

சோல், ஏப்ரல் 25
தென்கொரியா பயணிகள் விமானம் ஒன்றுக்கு வெடிகுண்டு வைத்த குற்றத்தை ஒப்புக்கொண்ட வட கொரிய பெண் ஒருத்திக்கு சோல்நீதி மன்றம் நேற்று மரண தண்டனை விதித்தது.

அப்பெண்ணின் பெயர் கிம் யோ- ஹீ. 1987 இல் நடந்த இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போது விமானத்தில் பயணஞ் செய்த 115 பயணிகளும் கொல்லப்பட்டனர். (எ)

### மெக்ஸிக்கோவில் பூமியதிர்ச்சி

மெக்ஸிகோ ஏப்ரல் 26
மெக்ஸிகோவில் நேற்று பூமி அதிர்ச்சி ஏற்பட்டது.

ஒருநிமிடம் மட்டும் நீடித்த பூமியதிர்ச்சியினுல் உடைமைகளுக்கு சேதம் ஏற்பட்டது.

ஒருவர் மின்சாரம் தாக்கி மரணமாளுர். கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கி 2 பெண்கள் படுகாயமடைந்தனர்.

பூமியதிர்ச்சி ஏற்பட்டவுடன் மக்கள் வீடுகளைவிட்டு வீதிகளுக்கு ஓடி வந்தனர்.

ரிச்டர் அளவையில் பூமி அதிர்ச்சியின் சக்தி 6. 8 ஆக இருந்ததாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

4 ஆண்டுகளுக்கு முன்னர் மெக்ஸிகோவில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் சுமார் 10ஆயிரம் பேர் உயிரிழந்தனர். (எ)

## சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் பாரிய மாற்றங்கள்

மாஸ்கோ, ஏப்ரல் 26
சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டன.

70 உறுப்பினர்கள் பதவி விலகினர். அவர்களில் முன்னுள் ஜனுதிபதி திரு. அன்றி குரொமிக்கோவும் ஒருவர்.

ஜனநாயக சீர்திருத்த நடவடிக்கைகளில் முக்கியமானது ஒன்ருக மத்திய கமிட்டி மாற்றம் அமைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. [எ]

---

அரச, கூட்டுத்தாபனங்களுக்கு

# புதிதாக ஊழியர்களைச் சேர்ப்பது தற்காலிகமாக இடை நிறுத்தம்

கொழும்பு, ஏப். 27
ஜனசக்தி திட்டத்தை ஆரம்பிக்கும்வரை அரச, கூட்டுத்தாபனங்களுக்கு புதிதாக ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதை அரசு தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துள்ளது.

அத்தியாவசிய சேவைகளுக்காக மட்டுமே அரசதுறையில் பல்வேறு வெற்றிடங்களுக்கும் ஆட்கள் சேர்க்கப்படுவர்.

ஏனைய துறைகளுக்கு ஆட்களைச் சேர்ப்பது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுஉள்ளது.

அமைச்சுக்களின் செயலாளர்களின் கூட்டத்தில் இது பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது (எ)

### சமூகசேவை உத்தியோகத்தர் வெற்றிடம்

மட்டக்களப்பு, ஏப்.27
சமூகசேவைகள்திணைக்களம் சமூகசேவை உத்தியோகத்தர் தரம் IIக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன. விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 28ஆம் திகதியாகும். [க-21]

### பதவியை ஏற்கவில்லை

மட்டக்களப்பு, ஏப்ரல்27
மட்டக்களப்பு மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் பெற்றுள்ள யாழ். பிரதம கல்வியதிகாரி திரு. பு. சோமசுந்தரம் இதுவரை தனது பதவியை ஏற்கவில்லை.

பிரதம கல்வி அதிகாரி ஜனுப். எம். சகாப்டீன் மறு அறிவித்தல்வரை பதில் பிரதி கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிவருகின்ருர். [க-21]

தேர்தலில் தோல்வியடைந்த

## முன்னுள் எம். பிக்களும் சொத்துக்களை வெளியிடவேண்டும்

கொழும்பு: ஏப் 26
கடந்த தேர்தலில் தோல்வி அடைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்களது சொத்துக்கள்,உடைமைகளை வெளியிட வேண்டும் என்று கோரப்படவிருக்கின்றனர்.

அரசாங்கம்இந்த முடிவை எடுத்திருக்கிறது

தற்போது எம்.பிக்களாக இருப்பவர்கள் மட்டுமே சொத்துக்கள், உடைமைகள் பற்றிய விவரங்களை வெளியிடவேண்டுங் என்று அரசு முன்னர் தீர்மானித்து இருந்தது. (ஒ-எ)

### நயினை விஜயம்

வேலணை, ஏப்ரல் 27
வடபகுதி மின் பொறியியலாளர் அண்மையில் நயினுதீவுப் பகுதிக்கு திடீர் விஜயம் மேற்கொண்டார்.

நயினுதீவு அறங்காவலர் சபையினர் நயினுதீவில் உள்ள மின் குறைபாடுகளை இவரிடம் எடுத்துக் கூறினர்.

இவருடன் யாழ் மாவட்ட மின் பொறியியலாளர் எஸ். வல்லிபுரம் வேலணை மின் அத்தியட்சகர் திரு. மா. விஜயஸ்ரீ ஆகியோரும் சென்றிருந்தனர். (உ.167)

### பதுளை டிப்போவில் ரூ. 4 லட்சம் கொள்ளை

கொழும்பு, ஏப்ரல் 27
மூகமூடியணிந்த சுமார் 25 பேர் கடந்த திங்கட்கிழமை அதிகாலை பதுளை இ. போ. ச. டிப்போவினுள் புகுந்து நான்கு லட்சம் ரூபா பணத்தை கொள்ளையிட்டுச் சென்றனர்.

வாகனம் ஒன்றில் அதிகாலை 2 மணியளவில் டிப்போவிற்குள் பிரவேசித்த இக்கோஷ்டி, அங்கு கடமையில் இருந்த 6 பாதுகாப்பு அதிகாரிகளைத் தாக்கி ஆயுதங்களைப் பறித்தனர்.

பின்னர் இரும்புப் பெட்டகத்தை உடைத்துத் திறந்து பணத்தை எடுத்துக்கொண்டு திரும்பினராம். (ஒ-எ)

## பிரபல ஏல விற்பனையாளர் ஆனமடுவவில் சுட்டுக் கொலை

கொழும்பு, ஏப். 27
கொழும்பில் பிரபல ஏல விற்பனையாளராகவும் தரகராகவும் பணியாற்றிய திரு. பேர்ஸி சமரவிக்ரம அவரது ஆனமடுவ தோட்டத்தில் வைத்து கடந்த சனியன்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவர் கொழும்பு மேற்கு எம். பி. யாக இருந்த திரு. எட்மண்ட் சமரவிக்ரமாவின் சகோதரர் ஆவார்.

இது தனிப்பட்ட பகைமை காரணமாக இடம்பெற்ற கொலையாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. [ஒ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

சமய சந்நிதிகளில்

### சைவ மகாசபை ஆண்டு விழா

யாழ்ப்பாணம் ஏப்ரல் 27
அகில இலங்கை சைவ மகாசபையின் 49 ஆவது ஆண்டு நிறைவு விழா மே 1 ஆம் திகதி காலை 9மணிக்கு சைவ பூஷணம் இ. நமசிவப் பிரகாசம் தலைமையில் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் வேதாகம மண்டபத்தில்நடைபெறும்.

திருமுறை ஊர்வலம் மாவை அந்தணர்களின் திருமுறை ஓதல் முதலியவற்றுடன் ஆரம்பிக்கும் விழா நிகழ்ச்சிகளில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்களின் பல்வேறு நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.(க)

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27
சங்கானை கிழக்கு ஸ்ரீகூடத்து மனேன்மணி அம்பாள் தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறும். (க)

### மதியபோசனம்

சாவகச்சேரி,, ஏப். 27
மட்டுவில் மகாவித்தியாலயத்தில் மே மாதம் 2 ஆம் திகதி முதல் மதிய போசனம் வழங்கப்படும்.

சுமார் 800 பிள்ளைகள் இங்கு கல்வி கற்கின்றனர்.

இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள அதிபர் திரு. அ பேரம்பலம் தலைமையில் ஐந்து பேர் கொண்ட குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (இ-31)

### இளம்குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு. ஏப். 27
வீட்டிலிருந்த இளம் குடும்பஸ்தர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் அண்மையில் தேவபுரத்தில் நடைபெற்றது.

இறந்தவர் அதேயூர் வாசியான எஸ். சிவநேசராசா (28 வயது) என அடையாளம் காணப்பட்டது. (க-21)

### கிராமசேவையாளர் இல்லை

அராலி, ஏப்ரல் 27
அராலி வடக்கு, அராலி தெற்கு கிராமசேவை அலுவலர்கள் இடமாற்றம் பெற்று சென்றுவிட்டதால் இவ்வெற்றிடங்கள் நிரப்பப்படாது இருக்கின்றன.

இதனுல் இப்பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

இப்பகுதிகளுக்கு நிரந்தர கிராமசேவை அலுவலர்களை விரைவில் நியமிக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கிறுர்கள். (க-12)




ஒரு முறை நாங்கள் (நபிகள் (ஸல்) அவர்களுடன் உட்கார்ந்திருந்தோம். அப்போது அங்கே ஒருவர் வந்து தமதிருமுட்டுக்கால்களையும் (ஸல்) அவர்களது முட்டுக்கால்களுடன் இணைத்து உட்கார்ந்து கொண்டார். பின்னர் (ஸல்) அவர்களிடம் வினவினுர், இஸ்லாம் என்ருல் என்ன? அதற்கு நபிகள் (ஸல்) இஸ்லாம் என்ருல், வணங்கத் தகுந்தவன் அல்லாஹ் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய தூதர் என்று சாட்சியம் கூறுவம் தொழுகையை கடைப்பிடிப்பதும், ஸகாத் எனும் ஏழை வரியை நிறைவேற்றுவதும் ரமழான் மாதத்தில் நோன்பு வைத்தலும்,புனித மக்கா சென்று வசதி படைத்தோர் ஹஜ் செய்வதுமாகும் என்று பதிலிறுத்தார்கள்.

**ஸஹர் முடிவு 4-24**
**நோன்பு திறக்கும் நேரம் 6-20**

சேட்டிங் சூட்டிங்
* குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
* றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்
**மயூரா சென்ரர்**
13 B. நவீன சந்தை, :: யாழ்ப்பாணம்.

**உதயன்**

27 - 04 - 1989 வியாழக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
* பட்டுப் பிடைவைகள்
* பட்டு வேஷ்டி சரல்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
**மயூரா சென்ரர்**
13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

# புனர்வாழ்வு, புனரமைப்புக்கு புதிதாக பெரும் திட்டம்

## ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு ஏப்ரல் 27

கலவரங்களினால் பாதிக்கப்பட்ட சகலபகுதிகளிலும் புனர்வாழ்வு, புனரமைப்பு சம்பந்தமான பாரிய திட்டம் ஒன்றை அரசு விரைவில் மேற்கொள்ள இருக்கிறது.

ஜனாதிபதி நேற்று முன்தினம் நடந்த மாநாடு ஒன்றில் இத் திட்டம் தொடர்பான அரசின் கொள்கையை விளக்கிக் கூறியிருக்கிறார்.

பாதிக்கப்பட்ட சகல பகுதிகளையும் உள்ளடக்கியதாக இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

இடம் பெயர்ந்தவர்களை மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு முன் உரிமை அளிக்கப்படும்.

இத்தகையவர்களுக்கு 21 ஆயிரம் ரூபாவை உதவியாக வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்ச வீட்டுப் பாவனைப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு என ஒரு குடும்பத்திற்கு 2 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும்.

ஆயிரம் ரூபாவுக்கு குறைந்த மாதாந்த வருமானம் பெறும் குடும்பம் சிறிய வீடு ஒன்றை புதிதாக அமைத்துக் கொள்வதற்கு மேலதிகமாக 15 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

2,500 ரூபாவுக்கு குறைவான மாதவருமானத்தை உடைய குடும்பத்துக்கு வீடமைப்பதற்கான மேலதிக பணம் 4 ஆயிரம் ரூபாவாக இருக்கும்.

இந்த உதவித்தொகையினை திருப்பிச் செலுத்த வேண்டிய அவசியமில்லை.

700 ரூபாவில் இருந்து 1,500 ரூபாவுக்கு இடைப்பட்ட மாத வருமானம் பெறும் ஒரு குடும்பம் வீடு கட்டுவதற்காக வழங்கப்படும் 15 ஆயிரம் ரூபாவுடன் மேலதிகமாக வீடமைப்புக் கடனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆகக் கூடுதலாக 15 ஆயிரம் ரூபா கடனை வழங்கப்படும் இதற்கு 6 சதவீத வட்டி அறவிடப்படும்.

கூடுதலான வருமானத்தைக் கொண்ட குடும்பங்கள் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா கொண்ட தொகையை வீடமைப்புக் கடனை பெற்றுக் கொள்ள முடியும்.

இடம் பெயர்ந்த குடும்பங்களின் வருமானத்துக்கு என ஏதாவது தொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்கு 2 லட்சம் ரூபாவரை கடனாகவும் வழங்கப்படவுள்ளது.

புனர் வாழ்வுக்கான உதவித் தொகை பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள உதவி அரச அதிபர் அலுவலகங்கள் மூலம் வழங்கப்படும்.

வீடமைப்பதற்கான 15ஆயிரம் ரூபா கடன் சிக்கனக் கூட்டுறவுச் சங்கங்கள் வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட அலுவலகங்கள் மூலம் கொடுக்கப்படும்.

15 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்டகூடுதலான வீடமைப்புக் கடன் தொகை இலங்கை வங்கி வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம், அரச அடமான முதலீட்டு வங்கி ஆகியன மூலம் வழங்கப்படும்.

தொழில் முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான கடன் இலங்கை வங்கி, மக்கள்வங்கி ஹட்டன் நஷனல் வங்கிஆகியவற்றின்கிளைகள் மூலமும் சமூக நல சேவை நிலையங்கள் மூலமும் வழங்கப்படும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை புனர்வாழ்வு புனர்அமைப்பு அமைச்சிடம் இருந்துபெற்றுக் கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டது. [உ-எ]

**NEW SCIENCE ACADEMY**
B. M C. முன்பாக — JAFFNA.
**90 A/L**
புதிய பிரிவு
தூய, பிரயோக கணிதம்
(ஒரு வருட காலத்தில் முழுப் பாடத்திட்டமும் முடிக்கப்படும்.)
ஆசிரியர்: பிரேம்நாத்
ஆரம்பம்:- 29 04. 1989 Sat. 2-00 p.m.
(C/2379)

## முறைசார..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டிருக்கிறது.

இந்தக் கற்கை நெறிகளில் மோட்டர் றீவைண்டிங், கைப்பணி, டிராக்டர் திருத்துதல், புத்தகம் கட்டுதல், ஓலைப் பொருள்களைச் செய்தல், விவசாய விஞ்ஞானம், மரத் தளபாட வேலை, மின் ஒட்டு வேலை, தோற் பொருள் உற்பத்தி, வாயு ஒட்டு, கடைச்சல் வேலை, உணவு பதனிடல், வானொலி - தொலைக்காட்சி பேணல், மின் உபகரண உற்பத்தி, வாகனங்களில் மின் இணைப்பு ஆகிய பயிற்சி நெறிகள் இடம் பெறுகின்றன. [உ-9]



SHABRA TROPHY
Calling all Cricket Loving Clubs in the Northern Province
FOR THEIR
**3rd ANNUAL LIMITED OVERS**
**Cricket Tournament**
FOR
**The SHABRA TROPHY**
Organised by
JOLLY STARS SPORTS CLUB
Sponsored by
SHABRA UNICO FINANCE LTD.
Entries Close at 12-00 noon
Draw at 4-00 p. m. } ON WEDNESDAY 3rd MAY, 1989
Collect your Entry Forms and Tournament Rules
From
K. Poopalasingam
Uthayan Advertisement Office,
No. 15, Second Lane,
Power House Road, Jaffna.
N. Somasuntharam
45, College Road,
Jaffna.

## அமைதிப்படை ஜெனரல் வடமராட்சியில் கலந்துரையாடல்

வல்வெட்டித்துறை, ஏப்ரல் 27

அமைதிப்படையின் புதிய வடபகுதிப் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் ஆர். என். பல்லா உடுப்பிட்டி, புலோலி ஆகிய இடங்களுக்கு நேற்று விஜயம் செய்தார்.

அவர் அந்தந்தப் பகுதிகளில் உள்ள முக்கிய பிரமுகர்களை அழைத்துக் கலந்துரையாடினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சமரசத் தீர்வு காணுமாறு மக்கள் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று பொறுப்பதிகாரி பிரமுகர்களிடம் கூறியதாக அறியப்படுகிறது.

இந்திய இராணுவம் இங்கு வந்ததன் பின்னரும், வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் வெலிஓயா மாவட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதனால் இந்தியா மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைப்பார்கள் என்பது கேள்விக் குறியே என்ற கருத்தை கலந்துரையாடலில் பங்குபற்றிய பிரமுகர் ஒருவர் கூறியதாகவும் தெரிகிறது.

மேஜர் ஜெனரல் பல்லா, உடுப்பிட்டியில் மகளிர் கல்லூரியிலும், புலோலியில் இராணுவ முகாமிலும் தமது கலந்துரையாடல்களை நடத்தினார். [அ-160]

## அடுத்த வாரம் பேச்சு

புதுடில்லி, ஏப். 27

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் திரு. எஸ். கே; சிங் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்வார்.

அவர் இலங்கை அதிகாரிகளுடன் பரஸ்பரம் அக்கறை உள்ள விடயங்கள் குறித்துப் பேசுவார்.

இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள நட்புறவு ஒப்பந்தம் குறித்தும் திரு. சிங் பேச்சு நடத்துவார். (அ)

## காணி, வீடமைப்புக் கடன்

கொழும்பு, காலி, திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் பணிபுரியும் 23 ஆயிரம் ஊழியர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 10 பேர்ச்சஸ் காணியும் வீடமைப்புக் கடனும் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

வர்த்தக கப்பற்றுறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

வீடமைப்புக் கடன் பெற்றுக்கொள்ள விரும்பும் துறைமுக ஊழியர்கள் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவராகச் சேர வேண்டும்.

## திருகோணமலை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

முன்னரும் மூன்று முறைகள் இடம்பெற்றபோது பாதுகாப்புத் தருவதாக வாக்குறுதியளிக்கப்பட்டதையடுத்து தாங்கள் தொடர்ந்தும் வேலைக்குச் சென்று வருவதாகவும்-

ஆனால் இனிமேல் எந்த உறுதிமொழியையும் தாங்கள் ஏற்கத் தயார் இல்லை என்றும் கச்சேரியில் கடமைபுரியும் தமிழ் ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் ஜனப் ஏ. சி எம், செய்யுருதீன் ''செவன் ஐலன்ட் ஹோட்டலில்'' தங்கி இருக்கிறார். அவர் கூட கோட்டைக்குள் கடமைக்குச் செல்வதற்கு அஞ்சுவதாகக் கூறப்படுகிறது.

அரசாங்க அதிபர் தற்சமயம் திருமலையில் இல்லை, அவர் திருமலை திரும்பியதும் கச்சேரியை இடம்மாற்றுவது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் எனத் தெரியவருகிறது. [உ-150]

## வன்செயல்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களுக்கும்' நிலைமை சீரடையாத காரணத்தினால் நீண்டகாலம் பராமரிக்கப்படாமையினால் திருத்தியமைக்கப்பட முடியாத கட்டடங்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

நாட்டில் கிடைக்கக் கூடிய வளங்கள் அனைத்தும் இத்திட்டத்துக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி பணித்திருக்கிறார். [உ-எ]

## எலும்புக்கூடு..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

டலத்தைக் கண்டனர்.

அப்பொட்டலம் கட்டப்பட்டிருந்த துணிமூலம் அவர் அணிந்திருந்த 'சாரம்' என அடையாளங் கண்டனர். அப்பொட்டலத்திற்குள் எலும்புக்கூடும், மண்டை ஓடும் காணப்பட்டன.

மரணவிசாரணை பதில் நீதிபதி திரு. கே.வேலுப்பிள்ளையினால் நடத்தப்பட்டுக் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

எலும்பும் மண்டைஓடும் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கைக்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. (ஓ-21)

## பாலசிங்கம்-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

யவை குறித்தும் நேற்றைய பேச்சுகளின்போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுக்களில் பங்கு பற்றுவதற்காக - திரு. அன்ரன் பாலசிங்கத்துடன் சேர்ந்து கொள்வதற்கு - மேலும் சில பிரதிநிதிகளை விடுதலைப் புலிகள் இயக்கம் கொழும்புக்கு விரைவில் அனுப்பும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்தப் பிரதிநிதிகள் கொழும்பு வந்து சேர்ந்ததும் உத்தியோகபூர்வப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## மாகாண..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி.

முன்னிலையில் நேற்று முன்தினம் நடந்தது.

இச் சட்ட மூலம் பற்றிய ஆட்சேப மனுக்களை சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, சிங்கள சட்டத்தரணிகள் சங்கம், சூழல் மன்றம் ஆகியன உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தன.

சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் 3 இல் 2 பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும்; சர்வசன வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டும் - இப்படி மனுக்களில் கோரப்பட்டிருந்தன. [ஓ-எ]

## பேச்சும் படை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

துருப்புகளை விலக்கிக்கொள்வது எப்போது விலக்கிக் கொள்வது என்பதெல்லாம் வடக்கு - கிழக்கில் சகஜ நிலைமை திரும்புவதைப் பொறுத்தே தங்கியுள்ளது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்கீழ் இந்தியாவுக்கு ஒரு கடப்பாடு உண்டு.

வடக்கு-கிழக்கில் சகல இன மக்களின் பாதுகாப்புக்குய் சமாதானத்தை நிலை நாட்டுவதற்கும் இந்தியா ஓர் உத்தரவாதியாக இருக்கிறது.

இந்தப் பணியை மேற்கொள்ள இந்தியா ஆகக் குறைந்தளவு துருப்புக்களை வைத்துக்கொள்ளும் என்றார். [அ-எ]

## பளை, புலோப்பளையில் பதற்றம் தொடர்கிறது

### செவ்வாய் இரண்டு சம்பவங்கள்

பச்சிலைப்பள்ளி, ஏப்ரல் 27

பளைப்பகுதியில் நேற்றும், செவ்வாய்க்கிழமையும் பெரும் பதற்றநிலை நிலவியது. புலோப்பளை மக்கள் அச்சத்தினால் தமது வீடுகளை விட்டு வெளியேறி அயற்கிராமங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை காலையிலும், பிற்பகலிலுமாக துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்கள் இரண்டு இடம்பெற்றதே பதற்றத்துக்குக் காரணம் ஆகும்.

செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் பளைநகரப் பகுதி 'சென்றி'யை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அதற்குப் பதிலாகத் துப்பாக்கிப் பிரயோகங்கள் செய்யப்பட்டன. இதனால் நகரப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. வியாபார நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டன. சந்தையில் உள்ள வியாபாரிகளும் பொதுமக்களும் தத்தமது பொருள்களை விட்டுவிட்டு நாலாபுறமும் சிதறிஓடினர்.

காலைச் சம்பவத்தையடுத்து கண்டிவீதிப் போக்குவரத்துக்கள் இரண்டு மணி நேரம் நடைப்பட்டன.

அடுத்த சம்பவம் செவ்வாய் பிற்பகல் இரண்டு மணிக்கு புலோப்பளைப் பகுதியில் இடம்பெற்றது. அது நேரடிமோதலாக அமைந்தது. இம்மோதலில் சிலர் காயமடைந்ததாகவும் அவர்களில் ஒருசிலர் பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் அறியவருகிறது.

புலோப்பளைப் பொதுமக்கள் பலரும் அச்சத்தின் நிமித்தம் தத்தமது வீடுகளிலிருந்து வெளியேறி அயற் கிராமங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இச்சம்பவங்களினால் நேற்றும் பளைநகரப் பகுதியிலுள்ள வியாபார நிலையங்களும், சந்தையும் மூடப்பட்டே இருந்தன. இதனால் பிரதான வீதியூடாகச் செல்லும் வாகனங்கள் பளையில் நிறுத்தாமல் சென்றன. பளையில் இருந்து மேற்கொள்ளப்படும் போக்குவரத்துக்கள் அனைத்தும் இத்தாவில் சந்தியில் இருந்தே நேற்று நடைபெற்றன.

நேரடி மோதலில் படையினர் இருவர் காயமடைந்ததாகக் கூறப்பட்டாலும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. சம்பவங்களைத் தொடர்ந்து மூன்று இளம் பெண்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டது; எனினும் ஊர்ஜிதமான தகவல் இல்லை. [அ-117]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பத்மினி பாலச்சந்திரன் (இந்திரா)

அச்சுவேலி இராச வீதியைச் சேர்ந்த திருமதி பத்மினி பாலச்சந்திரன் 25- 4- 89 அன்று காலமானார். இவர் பாலச்சந்திரன் [முன்னாள் கட்டிடத் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர்] அவர்களின் அன்பு மனைவியும், ஜனார்த்தனன், ஜதீந்திரன், தர்சன், வைதேகி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. செல்லத்துரை, காலம் சென்ற திருமதி செல்லத்துரை ஆகியோரின் அன்பு மகளும், திரு திருமதி சுந்தரம் ஆகியோரின் மருமகளும், இராமகிருஷ்ணன் [உ. அ. அதிபர் அலுவலகம், காரைதீவு], இராதா கிருஷ்ணன், லலிதா, பிரியதர்சினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாதேவி [கிராமிய அபிவிருத்தி உத்தியோகஸ்தர், மட்டக்களப்பு]முத்தையா [விவசாய திணைக்களம், மட்டக்களப்பு] புஸ்பா, காலம் சென்ற ஜெயச்சந்திரன், விமலச்சந்திரன் [இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்], ஞானச்சந்திரன், ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27- 4- 89 வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்: பாலச்சந்திரன்

44, இராச வீதி,
அச்சுவேலி.

[10694]

### விசுவலிங்கக் குருக்கள்

திரு. அம்பலவாணர் ஐயர் விசுவலிங்கக் குருக்கள் 26-04-1989-ல் சிவபதம் அடைந்துவிட்டார். இவர் முத்துலட்சுமியின் அன்புக் கணவரும், கோபாலகிருஷ்ணன், (முன்னைநாள் விகிதர் ப. பரிஸ் ப. நோ. கூ. ச.) கணேசலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் இரத்தினேஸ்வரி, சசிகலா ஆகியோரின் அன்பு மாமனாரும் கேதீஸ்வரன், மானிப்பாய் இந்துக்கல்லூரி) ஞானேஸ்வரன், சர்வேஸ்வரன், (இளவாலை சென். ஹென்றிஸ்) கிரிசாந்தி, குகபாலினி, குகரூபன் ஆகியோரின் பேரனும் செல்லையா, காலம்சென்ற முருகேசு, தங்கராசா, சின்னத்தங்கம், இரத்தினம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், முத்துக்குமாரசாமிக் குருக்கள் (திருமலை பிள்ளையார் கோவில்) நடராஜகுமாரன் (Rt. Divisonal Officer) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (27-04-1989) வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றேன்.

மாதகல் பிள்ளையார் கோவிலடி,
மாதகல்.

தகவல் :
கணேசலிங்கம் (மகன்)
நடராஜகுமாரன்

[282]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 27 – 04 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.